பவானிசாகர் அணை பூங்கா அருகே

உலா வந்த 4 காட்டு யானைகள்

பொதுமக்கள் அச்சம்

சத்தியமங்கலம், ஜூன் 4: சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் ஏராளமான காட்டு யானைகள் உள்ளன. இந்த நிலையில் பவானிசாகர் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டு யானைகள் நேற்று பட்டப்பகலில் பவானிசாகர் அணையின் கரையை ஒட்டி உள்ள கீழ்பவானி வாய்க்கால் பகுதியில் நடமாடின. இதனால் பொதுமக்கள் மிகுந்த அச்சமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற வனத்துறையினர் யானைகளின் நடமாட்டத்தை கண்காணித்து வருகின்றனர். பகல் நேரத்தில் யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டும் பணியில் ஈடுபட்டால் யானைகள் ஊருக்குள் நுழைய வாய்ப்புள்ளதால் இரவு நேரத்தில் விரட்டியடிக்க திட்டமிட்டதாக வனத்துறையினர் தெரிவித்தனர். இதற்கிடையே பவானிசாகர் அணையின் கரைப்பகுதியில் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை மேய்க்கசெல்வோர் மிகுந்த கவனத்துடன் எச்சரிக்கையாக இருக்குமாறு வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

▶ பவானிசாகர் அணை பூங்கா அருகே உலா வந்த காட்டு யானைகள்.

கருணாநிதி பிறந்த நாளையொட்டி

திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள்

▶ ஈரோடு சம்பத் நகரில் இளைஞரணி சார்பில் நடந்த விழாவில் முன்னாள் அமைச்சர் முத்துசாமி ஆட்டோ ஓட்டுநர், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் இளைஞரணி அமைப்பாளர் திருவாசகம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

ஈரோடு, ஜூன் 4: கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு சம்பத் நகரில் தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடந்தது.

மாவட்ட அமைப்பாளர் திருவாசகம் தலைமையில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான முத்துசாமி கலந்துக்கொண்டு, 70 மாற்றுத்திறனாளிகள், 30 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு வீட்டு உபயோக பொருட்களை வழங்கினார்.

இதில் மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரகாஷ் எம்பி, மாநில நிர்வாகிகள் கந்தசாமி, அந்தியூர் செல்வராஜ், குறிஞ்சி சிவக்குமார், சந்திரகுமார், மாவட்ட நிர்வாகிகள் செந்தில்குமார், செல்லப்பொன்னி, பழனிசாமி, மாநகர செயலாளர் சுப்ரமணியம், இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாணவர் அணி மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து விதி மீறல் 1,471 பேர் மீது வழக்கு

ரூ.4.42 லட்சம் அபராதம்

ஈரோடு, ஜூன் 4: ஈரோடு மாநகரில் போக்குவரத்து விதிகளை மீறியதாக கடந்த மாதம் 1,471 வாகன ஓட்டிகள் மீது போலீசார் வழக்கு பதிந்து, ரூ.4.42 லட்சம் அபராதம் விதித்துள்ளனர்.

ஈரோடு மாநகரில் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. இதில், சில வாகன ஓட்டிகள் போக்குவரத்து விதி மீறி வாகனங்களை இயக்கி வருவதால் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. இதனால், போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை இயக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஈரோடு எஸ்பி கிரண் ஸ்ருதி உத்தரவிட்டார்.

அதன்பேரில், ஈரோடு தெற்கு போக்குவரத்து போலீசார் கடந்த மே மாதம் ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டானா, பன்னீர்செல்வம் பூங்கா சந்திப்பு, காளைமாட்டு சிலை, கலெக்டர் அலுவலகம், மூலப்பாளையம் சந்திப்பு, கொல்லம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டனர்.

இதில், மதுபோதையில் வாகனம் இயக்கியதாக 68 வழக்கு, ஹெல்மெட் அணியாமல் சென்றதாக 714 வழக்கு, ஓட்டுநர் உரிமம் இன்றி வாகனம் இயக்கியதாக 147, செல்போன் பேசியபடி வாகனத்தை இயக்கியதாக 46 வழக்கு, மூவர் பயணித்ததாக 34 வழக்கு, போக்குவரத்து சிக்னலை மதிக்காமல் சென்றதாக 39 வழக்கு, விபத்து ஏற்படும் வகையில் வாகனம் ஓட்டியதாக 24 வழக்கு மற்றும் இதர வழக்குகள் 252 என மொத்தம் 1,471 வாகன ஓட்டிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, வாகன உரிமையாளர்களுக்கு ரூ.4 லட்சத்து 42 ஆயிரத்து 400 அபராதம் விதிக்கப்பட்டது.

மது போதையில் வாகனம் இயக்கியதாக உறுதி செய்யப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்ட 27 வாகன ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்ய வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டதாக தெற்கு போக்குவரத்து போலீசார் தெரிவித்தனர்.

சித்தோடு ஒழுங்குமுறை கூடத்தில் சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம்

விவசாயிகளுக்கு அழைப்பு

ஈரோடு, ஜூன் 4: சித்தோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சனிக்கிழமை தோறும் நடக்கும் மஞ்சள் ஏலத்தினை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈரோடு அடுத்த கன்னிமார்காடு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்பு அருகே உள்ள சித்தோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் சனிக்கிழமையன்று காலை 11 மணிக்கு மஞ்சள் ஏல விற்பனை நடந்து வருகிறது.

விவசாயிகள் தங்கள் மஞ்சள் மூட்டைகளை கல், மண், தூசி, இதர பொருட்களை நீக்கி பிரதி வாரம் செவ்வாய் கிழமை முதல் வெள்ளி கிழமை வரை இருப்பு வைத்து, சனிக்கிழமை நடக்கும் ஏலத்தில் பங்கேற்கலாம். விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை இருப்பு மற்றும் விற்பனை செய்வதற்கு தங்கள் ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகலை கொண்டு வந்து விற்பனை கூடத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த விற்பனை கூடத்தில் 2 ஆயிரம் டன் அளவுள்ள கிடங்குகள், 60 டன் அளவுள்ள எடைமேடை வசதிகள் உள்ளன. எனவே, ஈரோடு மாவட்ட விவசாயிகள் சித்தோடு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை முழுமையாக பயன்படுத்தி கொள்ளலாம். கூடுதல் விபரத்துக்கு 70105 66694 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு விற்பனை குழுவின் வேளாண் துணை இயக்குனர் கலைசெல்வி தெரிவித்துள்ளார்.

பருவமழையையொட்டி

அதிகாரிகள், பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தல்

ஈரோடு, ஜூன் 4: பருவமழை துவங்கவுள்ளதால் மாநகராட்சி அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என ஆணையர் அர்பித் ஜெயின் அறிவுறுத்தியுள்ளார்.

தென்மேற்கு பருவமழை விரைவில் துவங்கவுள்ளது. இதனால், ஈரோடு மாநகராட்சியில் பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக நடந்து வருகிறது. மழை எவ்வளவு பெய்தாலும், பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இருக்க கூடாது என்ற அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையர் அர்பித் ஜெயின் சமீபத்தில் அறிவுறுத்தியிருந்தார். அதன்படி, மழை நீர் தேங்காமல் வழிந்தோடுவதற்கு வசதியாக மழை நீர் வாய்க்கால்கள், கால்வாய்களை மாநகராட்சி அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள் தூர் வாரி வருகின்றனர். கால்வாய்களில் தேங்கி இருக்கும் பிளாஸ்டிக், மணல் ஆகியவற்றையும் தூய்மை பணியாளர்கள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

சாலைகளில் தோண்டப்பட்ட பள்ளங்கள், பாதாள சாக்கடை மற்றும் குடிநீருக்காக தோண்டப்பட்ட சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. மழைக்கு சாயும் நிலையில் உள்ள மரங்களை கண்டறிந்து அதனை அகற்றும் பணியிலும் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பருவமழை துவங்கவுள்ளதால் மாநகராட்சி அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் குறிப்பாக இரவு நேரங்களில் மழை பெய்தால் அவற்றை எதிர்கொள்ளும் வகையில், அதிகாரிகள், தூய்மை பணியாளர்கள் தயாராக இருக்க வேண்டும். மேலும் போதிய உபகரணங்கள் மற்றும் ஜேசிபி வாகனங்களையும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் ஆணையர் அர்பித் ஜெயின் அறிவுறுத்தியுள்ளார்.

அக்னிமாரியம்மன் கோயில் திருவிழா

▶ ஆனக்கவுண்டனூர் அக்னி மாரியம்மன் கோயில் திருவிழாவில் மாவிளக்கு எடுத்து வந்த பெண் பக்தர்கள்.

அந்தியூர், ஜூன் 4: அந்தியூர் அருகே ஆனைகவுண்டனூரில் உள்ள அக்னி மாரியம்மன் கோயிலில் 2 ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, கடந்த 15 நாட்களுக்கு முன்பு பூச்சாட்டுதலுடன், கம்பம் நடப்பட்டு திருவிழா துவங்கியது. பெண்கள் நாள்தோறும் கம்பத்திற்கு தண்ணீர் ஊற்றி வழிபாடு செய்து வந்தனர். முக்கிய நிகழ்வான பெண்கள் மாவிளக்கு எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

அம்மனை அழைத்து வரும்போது பின்னே நூற்றுக்கணக்கான பெண்கள் மாவிளக்கு எடுத்து வந்தனர். தொடர்ந்து பொங்கல் வைத்தும், கெடா வெட்டியும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர். இதில் அந்தியூர், அம்மாபேட்டை சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.

மசூதிகளில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க மானியம்

ஜூன் 30ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

ஈரோடு, ஜூன் 4: உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 18 வயது முதல் 60 வயது வரை உள்ள உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க மானியத்தொகை ரூ.50 ஆயிரம் வழங்க தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் (மசூதிகள்) பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள்-ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்கள் விண்ணப்பிக்கலாம்.

இரு சக்கரம் வாகனத்திற்கான மானியம் பெற மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலரிடம் படிவத்தினை பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்ற பின்னரே பயனாளி இரு சக்கர வாகனம் வாங்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அல்லது சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் வருகிற 30ம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் சமர்பிக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கஞ்சா விற்ற வாலிபர் கைது

ஈரோடு, ஜூன் 4: ஈரோடு கருங்கல்பாளையம் ராஜாஜிபுரம் குப்பைக்காடு பகுதியில் கஞ்சா பொட்டலங்கள் விற்பனை செய்வதாக போலீசாருக்கு தகவல் வந்தது.

இதன்பேரில், ஈரோடு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு எஸ்எஸ்ஐ ராஜா தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் அங்கு விரைந்து சென்று, கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த கருங்கல்பாளையம் மில் வீதியை சேர்ந்த குமார் மகன் சக்திவேல் (24) என்பவரை கைது செய்தனர்.

அவரிடம் இருந்து 200 கிராம் கஞ்சா பொட்டலங்களை பறிமுதல் செய்யப்பட்டன.

சிகரம் தொட்ட சாதனையாளர் விருது

▶ ஈரோடு கொங்கு கலையரங்கில் நடைபெற்ற முதல்வன் விருது வழங்கும் விழாவில் சித்தா மருத்துவத்துறையில் பல்வேறு சாதனைகள் படைத்த அருள் சித்தா கிளினிக் நிறுவனர் மருத்துவர் அருள் நாகலிங்கத்தின் சேவையை பாராட்டி சென்னை ஆவடி காவல் இணை ஆணையர் டாக்டர் ஆர்.சிவக்குமார் சிகரம் தொட்ட சாதனையாளர் விருதினை வழங்கினார்.

மேகதாது அணை திட்டத்தை கைவிட வேண்டும்

காங். மாநில பொதுக்குழு உறுப்பினர் வலியுறுத்தல்

ஈரோடு, ஜூன் 4: மேகதாது அணை திட்டத்தை கைவிடக்கோரி காங்கிரஸ் மாநில பொதுக் குழு உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார்.

▶ செந்தில் ராஜா.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில பொதுக் குழு உறுப்பினர் செந்தில் ராஜா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது பகுதியில் அணை கட்டும் முயற்சியை தீவிரப்படுத்தி வருவது தமிழக மக்களிடையே கடும் அதிருப்தியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே காவிரி நீர் பகிர்வு பிரச்னையால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், மேகதாது அணை கட்டப்பட்டால் தமிழகத்திற்கு வர வேண்டிய நீரின் ஓட்டம் மேலும் பாதிக்கப்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

மேகதாது அணை மூலம் மேல்நீரை சேமிக்கும் சூழல் உருவானால், விவசாயத்திற்கும் குடிநீருக்கும் தேவையான நீரின் கிடைப்பு குறையக்கூடும். இதனால் ஈரோடு மாவட்டத்தின் விவசாய பொருளாதாரம், விவசாய தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவுகளின் அடிப்படையில் தமிழகத்திற்கு உரிய நீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடு.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மாநில அரசுடன் இணைந்து தமிழகத்தின் நீர்வள உரிமையை பாதுகாக்க தொடர்ந்து குரல் கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். காவிரி தமிழகத்தின் உயிர்நாடி, அதன் நீர்வள உரிமையை எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்க முடியாது.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தெற்கு இன்ஸ்பெக்டர் பொறுப்பேற்பு

ஈரோடு, ஜூன் 4: ஈரோடு தெற்கு போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டராக அனுராதா பொறுப்பேற்று கொண்டார். இதற்கு முன்பு ஊட்டியில் பணியாற்றி வந்தார்.

தெற்கு போலீஸ் ஸ்டேஷனில் பணியாற்றிய அர்ஜூன் குமார், கோவை மாநகருக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

அனுராதா ஏற்கனவே ஈரோடு டவுன் போலீஸ் ஸ்டேஷனில் தேர்தலுக்கு முன் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

pnb Housing Finance Limited — Ghar Ki Baat

பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து/களின் மின்–ஏலம் பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: 1வது தளம், ப்ரோ ரோடு, கலக்டர் அலுவலகம் அருகில், ஈரோடு - 638001, தமிழ்நாடு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியின் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ளவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/ERD/0723/1140810 கோவிந்தராஜு ஆர் / பூங்கொடி வி, கி.அ: ஈரோடு	Rs. 31,56,484.99 & 10.12.2025	கையக	பழைய SF எண். 731/1, 732, 741; மறு–SF எண். 8/4; தற்போதைய துணைப் பிரிவு மறு–SF எண். 8/4B6; மனை எண். 30, 31; பட்டா எண். 2082; சண்முகா நகர், சின்னமாபுரம், புஞ்சைகலமங்கலம் கிராமம் மற்றும் கிராம பஞ்சாயத்து, மொடக்குறிச்சி தாலுக்கா, தமிழ்நாடு 638153	Rs. 42,24,000	Rs. 4,22,400	13.07.2026	Rs. 10,000	18.06.2026 11:00 AM to 05:00 PM	14.07.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது

•பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. •• பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனாசஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டு சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். 4. M/s. ஃபோர்குளோசர்இந்தியா.காம் மின்–ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்–500038, இணையதளம்–info@bank.eauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை திரு. ஏங்கெல்ஸ்/ துர்கேஷ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண், செல்பேசி: 9344007827 / 9042840151/ 9840487424 / 9738931789, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது www.pnbhousing.com – ஐ காணவும்.

இடம்: ஈரோடு, நாள்: 03.06.2026 — ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

Chola — Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்பரேட் அலுவலகம்: சோழா கிரெஸ்ட், சி54&சி55, சூப்பர் பி–4, திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு.

மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு (மின்–ஏலப்புள்ளி மூலம் மட்டுமான விற்பனை)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) இன் கீழ் அசையா கடனீட்டுச் சொத்துகள் ஏல விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் நிரல்(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம் / உரிமை அளிக்கப்பட்ட, சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் நிரல் (C) இல் விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, நிரல் (D) இல் விவரிக்கப்பட்டவாறு சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. அவை கீழே கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன்மூலம் நிரல்(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு, சட்டப்பூர்வ பிரதிநிதிகள் (தெரிந்த அல்லது தெரியாத), செயல்பிரதிநிதி(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்) மற்றும் உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 9(1) கீழ் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் & நிபந்தனைகளுக்கு, சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in ஆகியவற்றில் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

	[A]	[B]	[C]	[D]	[E & F]	[G]
வ. எண்.	கடன் கணக்கு எண்/ கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்கள்	மீட்கப்பட வேண்டிய நிலுவைத்தொகைகள் (கடனீட்டுக் கடன்கள்)	அசையாச் சொத்து விவரம்/ கடனீட்டுச் சொத்து	சுவாதீனம் வகை	நிர்ணய விலை (ரூ.) / முன்வைப்புத்தொகை (ரூ)	ஏலம் நாள் மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்). : HL24GPM000093180 1. திரு/திருமதி. மனோஜ்குமார் முத்துராமன் 2. திரு/திருமதி. லோகமணி M வ.எண். 1 & 2 இன் முகவரி: 2/3பி, ஆத்தம்பாளையம், கெட்டிசமுத்திரம், ஈரோடு, கோயில், ஈரோடு, தமிழ்நாடு – 638501 வ.எண். 1&2 இன் முகவரி: S.F.No.968/2a, 1a, மாரியம்மன் கோவில், அந்தியூர் தாலுகா, அந்தியூர் தாலுகா, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு – 638501	11.04.2025 தேதியின்படி ரூ. 26,74,951/– (ரூபாய் இருபத்து ஆறு லட்சத்து எழுபத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒன்று மட்டும்)	ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், அந்தியூர் துணைப் பதிவு மாவட்டம், அந்தியூர் வட்டம், அந்தியூர் கிராமம், RS F.No: 968/2A, புஞ்சை ஏக்கர் 0.24.5 ஏக்கர், பழைய Sf No.: 651A & 651B. இச்சொத்தின் மேற்குப் பகுதியில் விற்பவரின் மகன் குமாரசாமிக்கு ஒதுக்கப்பட்ட நிலமும், கிழக்குப் பகுதியில் விற்பவரின் மகன் நல்லசாமிக்கு ஒதுக்கப்பட்ட நிலமும், வடக்குப் பகுதியில் சின்னம்மாள் நிலமும், தெற்குப் பகுதியில் கிழக்கு–மேற்குச் சாலையும் அமைந்துள்ளன. இவற்றுக்கு நடுவே, ஆவணத்தின்படி வழக்கமான வண்டிப்பாதை மற்றும் நடைபாதை உரிமைகளுடன் கூடிய, மொத்தம் புஞ்சை ஏக்கர் 0.06 ½ சமமான புஞ்சை ஹெக்டேர் 0.02.8 பரப்பளவு உள்ள நிலம் அமைந்துள்ளது. இந்நிலத்தில், கட்டிட ஒப்புதல் திட்டம் மற்றும் ஆணை எண். 3/2015–இன் அடிப்படையில், கதவு எண் 117–ஐக் கொண்ட ஒரு புதிய ஆர்சிசி மாடி வீட்டை விண்ணப்பதாரர் கட்டி அமைத்துள்ளார்.	கையக சுவாதீனம்	ரூ. 29,84,093/– (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொண்ணூற்று மூன்று மட்டும்) / ரூ. 2,98,409.30 (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்றெட்டு ஆயிரத்து நானூற்று ஒன்பது மற்றும் முப்பது பைசா)	29–06–2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (ஒப்பந்தப்புள்ளி ஆவணம் விதிமுறைகளில் தலா 5 நிமிடங்கள் தன்னிச்சை நீட்டிப்புகளுடன்)
	சொத்து பார்வையிடும் நாள்: 26.06.2026, 11.00 am முதல் 4.00 pm வரை			குறைந்தபட்ச ஏலம் உயர்த்தும் தொகை ரூ. 10,000/–		
	ஏலப்புள்ளி / முன்வைப்புத்தொகை / பங்கேற்பதற்கான விண்ணப்பக் கடிதம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 27.06.2026 மாலை 5 மணி வரை.					

*** அதற்கான பணப்பட்டுவாடா மற்றும் / அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவுகள், கட்டணங்கள் ஏனையவற்றுடன், கடன் ஒப்பந்தத்தின்படி பொருந்துமாறு மேற்கொண்டு வட்டியுடன்.**

சொத்தைப் பார்வையிடுதல் அல்லது ஏல ஆவணத்தைப் பெறுதல் மற்றும் மேலும் ஏதேனும் பிற வினாக்களுக்கு சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரி 1. சுரேஷ் D, கைபேசி எண்.8124483887 மற்றும் மின்னஞ்சல்: sureshdurairaju@chola1.murugappa.com, 2. கோபிகிருஷ்ணன்.J கைபேசி எண்.9003366333 மற்றும் மின்னஞ்சல்: gopikrishnanj@chola.murugappa.com மூலம் தொடர்பு கொள்ளவும். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில் மேற்கூறிய அசையாச் சொத்துகள்/ கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான வில்லங்கங்கள் எதுவுமில்லை.

நாள்: 03.06.2026 இடம்: ஈரோடு, தமிழ்நாடு. — ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெடுக்காக

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777
9.30 AM - 6.00 PM